## பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஒப்பீடு (பாடம்-2)

## புதிய ஏற்பாட்டு ஊழியம்

பழைய ஏற்பாட்டு ஊழியத்தை **[சிலர்]** செய்கிறார்கள் என்பதற்கு அடையாளங்கள்

1. ஊழியருக்கும் சபை மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி (உடையினால் வேறுபடுத்தி காண்பிக்கின்றனர் மற்றும் பலகாரியங்கள்)
2. ஆலய அமைப்பு – பழைய ஏற்பாட்டு அமைப்பின்படியே மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு ஒப்பனையான இடம் உண்டாக்கப்பட்டிருக்கிறதைக் காண்கின்றோம்.

ஊழியத்திற்காக பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள்

பழைய ஏற்பாடு – "ஷாரத்" [sharat] "அபாட்"[abad] (எபிரெய வார்த்தை)

புதிய ஏற்பாடு – "டயகோனியா" (கிரேக்க வார்த்தை)

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட டயகோனியா என்கிற வார்த்தைக்கு ஒப்பான எபிரெய வார்த்தை பழைய ஏற்பாட்டில் எஸ்தர் புஸ்தகத்தில் அல்லாமல் வேறெங்கும் பயன்படுத்தபடவில்லை.. **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,** என்று எபேசியர் 4:12ல் வாசிக்கின்றோம். இதிலுள்ள "சுவிசேஷ ஊழியத்தின்" என்கிற வார்த்தைக்கு இணையான கிரேக்க வார்த்தை டயகோனியா என்பதாகும்.

பழைய ஏற்பாட்டு ஊழியம் வேறே, புதிய ஏற்பாட்டு ஊழியம் வேறே.

பழைய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன.

1. ஷாரத், அபாட் என்ற இந்த வார்த்தைக்கு குறிப்பிட்ட ஆசாரிய வகுப்பைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட ஊழியத்தை குறிப்பிட்ட இடத்தில் செய்வது என்று பொருள் தருகிறது. (யாத் 28:43, எண் 3:6,31) ஆனால் புதிய ஏற்பாட்டில் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட ராஜரீக ஆசாரிய கூட்டமாய் இருக்கிறார்கள் என்று 1 பேதுரு 2:9ல் வாசிக்கின்றோம்.
2. பழைய ஏற்பாட்டு ஊழியமுறையின்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட ஜனகூட்டம் வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளுடன் தேவனுக்கு ஊழியம் செய்தனர்.

புதிய ஏற்பாட்டில் - இயேசு கிறிஸ்துவானவர், அப்போஸ்தலர்கள், யூதர்களிலிருந்தும் கிரேக்கர்களிலிருந்தும் ஊழியத்திற்காக ஆட்களை அழைத்து வாய்ப்பு கொடுத்து பயன்படுத்துகிறதைப் பார்க்கின்றோம்.

மாற்கு 10:45ல் இயேசு கிறிஸ்து ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்டும்பொருளாக தன் ஜீவனை கொடுக்கவும் வந்தார் என்று வாசிக்கிற இவ்வசனத்திலும் டயகோனியா என்கிற வார்த்தையே பயன்படுத்த பட்டிருக்கிறது.

பிறரை வேலை வாஙகுவதற்காக அல்ல தானும் வேலை செய்ய ஊழியம் செய்ய இயேசுகிறிஸ்து வந்தார்.

மத்தேயு 23:8-12

நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்ளூ கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.(மத் 23:8)

பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்ளூ பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்.(மத் 23:9)

நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்ளூ கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்.(மத் 23:10)

உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மத் 23:11)

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். (மத் 23:12)

மற்றும் மாற்கு 10:42-44 ஆகிய வசனங்களை நாம் வாசித்துப் பார்க்கின்ற பொழுது பணிவிடைக்காரர்களாய் ஊழியக்காரர்களாய் இருந்து தேவனுக்கும் பிறருக்கும் ஊழியம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் தன்மைகள்

1. தாழ்மையான சிந்தையோடு சேவை செய்வது. (டயகோனியா – பந்திவிசாரணை செய்கிறவன் என்கிற பொருள்)
2. பரந்த விரிந்த எல்லையையுடைது
    - போதனை செய்தல், உதவி செய்தல் - அப்போஸ்தலர் 6:1-4, 1 பேதுரு 4:11
    - ஊழியத்திற்கான பணத்தேவையை சந்திப்பதற்காக பெண்கள் செய்த ஊழியம். மாற்கு 15:40

- தனிப்பட்ட விதங்களில் ஜனங்களுக்கு, ஊழியர்களுக்கு வேலை செய்கிற ஊழியம் - அப் 6:2-4, 19:22, 1 பேதுரு 1:12, 2 தீமோ 1:16-18, 4:11
- தேவையோடிருக்கிறவர்களுக்கு பண உதவி செய்கிற ஊழியம். அப் 11:29, 12:25, ரோமர் 15:25, 2 கொரி 8:4, 2 கொரி 8:19,20, 2 கொரி 9:1
- பரிசுத்தவான்களுக்கு செய்யப்படுகிற பொதுவான ஊழியம்- எபிரெயர் 6:10
- அப்போஸ்தலர்களின் ஊழியம் - அப் 1:17, 20:24
- மனிதர்களை தேவனோடு ஒப்புரவாக்குகிற ஊழியம் - 2 கொரி 5:18
- குறுகிய காலத்திற்கு செய்யப்படும் சில ஊழியம் - அப் 12:25

3. ஒவ்வொருவருக்கும் பொதுவான மற்றும் தனித்தனியான ஊழியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.
   பொதுவான ஊழியங்கள்
   - கொடுத்தல் - 2 கொரி 9:7
   - போதித்தல், உபதேசித்தல், சுவிசேஷம் அறிவித்தல் - மத் 28:18-20
   - உற்சாகப்படுத்துதல் - 1 தெச 5:11,14
   - ஜெபிக்கிற ஊழியம் - யாக் 5:16

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய ஊழியம் - 1 கொரி 12:4-7. (தேவன் தந்திருக்கிற வரங்களை, தாலந்துகளை மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துதல்)

4. நடைமுறையானது, ஆசீர்வாதமானது, ஆக்கபூர்வமானது 1 பேதுரு 4:10
   - புறஜாதிகளுக்கு செய்யப்படுகிற சுவிசேஷ ஊழியம் - 2 கொரி 5:19
   - பரிசுத்தவான்களுக்கு செய்யப்படுகிற ஊழியம் - எபேசியர் 4:12,13
5. ஆவிக்குரிய ஊழியம்
   - பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்படுகிற மற்றும் வல்லமைப்படுத்தப் படுகிற ஊழியம். 2 கொரி 3:7-11, எபே 1:3. பரிசுத்த ஆவியானவர் வல்லமை வரங்களை தந்து செயல்படுத்துகிறார்.
   - ஆவிக்குரிய விளைவு உண்டாக்கக்கூடியது. எபேசியர் 4:12-16 (ஆவிக்குரிய வளர்ச்சி, பரிசுத்தவான்கள் சீர்பொருந்துகிற ஊழியம்)

புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் நோக்கம்

1. இயேசு கிறிஸ்து ஊழியம் செய்தார் மட்டுமல்ல அவரை தொடர்ந்து நாமும் செய்யும்படி கட்டளை கொடுத்திருக்கிறார். ஆகவே, நம்மையும் ஊழியம் செய்ய வைக்கவேண்டும். இதுவே புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் நோக்கம்

மத்தேயு 28:18-20

1. தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி ஊழியம் செய்ய வேண்டும். 2 கொரி 9:13, 1 பேதுரு 4:11
2. தேவன் மேலுள்ள அன்பையையும், அவருக்கு நன்றியுடையவர்களாய் இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும்படிக்கு ஊழியம் செய்கிறோம். யோவான் 12:26, 15:10,11, 21:15-19
3. தேவனுடைய திருச்சபையில் ஆவிக்குரிய வளர்ச்சியையும், பக்திவிருத்தியையும், உண்டாக்குவதற்காக ஊழியம் செய்கிறோம். (எபே 4:12-16
4. நம்முடைய வாழ்வு நோக்கம் நிறைந்ததாகவும் அர்த்தமுடையதாகவும் காணப்பட நாம் ஊழியம் செய்கின்றோம். 1 கொரி 12:14-27

கேள்விகள்

1. பழைய ஏற்பாட்டின் ஊழியத்தை குறிப்பிடும் எபிரெய வார்த்தைகளையும், புதிய ஏற்பாட்டின் ஊழியத்தை குறிப்பிடும் கிரேக்க வார்த்தையையும், இவைகளுக்குரிய விளக்கங்களையும் கூறுக?
2. பழைய ஏற்பாட்டு ஊழியத்திற்கும், புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் இடையே உள்ள வித்தியாசங்களை இப்பாடத்தில் கற்றுக்கொண்டதிலிருந்து எழுதுக?
3. புதிய ஏற்பாட்டு ஊழியத்தினுடைய தன்மைகள் யாவை என்பதனை வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?
4. புதிய ஏற்பாட்டு ஊழியத்தினுடைய பிரதானமான நோக்கங்கள் என்னென்ன என்பதை வசன ஆதாரத்துடன் கூறுக?